**கீழ்குளம் இரண்டாம் நிலை பேரூராட்சி**

**கன்னியாகுமரி மாவட்டம்**

ந.க.எண். 90/ **2022/அ1** **நாள்: 21.07.2022**

**குறுகிய கால மறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

கன்னியாகுமரி மாவட்டம் கீழ்குளம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் 2021-22 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மின்கலன் (Battery Operated Vehicle) மூலம் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்துகீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால்29.07.2022 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தபுள்ளி படிவங்களை 28.07.2022 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விபரப்படி கீழ்குளம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி (வரி உட்பட) பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தபுள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தபுள்ளி என்றும் திறப்பு தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளியுடன் பணிக்கான வைப்புத்தொகையினை "Executive Officer, Keezhkulam Town Panchayat" எனும் பெயரில் வங்கி வரைவோலை எடுத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை 29.07.2022 ஆம் தேதி அன்று பிற்பகல் 3.30 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அரவது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

| வ. எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி படிவ கட்டணம் ரூ. | பணி முடிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனம்-8 எண்ணிக்கை கொள்முதல் செய்தல். | 12,40,000/- | 12400/- | 3120/- | 30 நாட்கள். |

**நிபந்தனைகள்**

1. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக்குழுவில் மின் கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின் படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் மின் கலன் (Sealed Lead Acid) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.டி.(5 சதவீதம்) நீங்கலாக ரூ. 1.45 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தபுள்ளி அளிக்கப்படவேண்டும்.

2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன்படி ஒப்பந்தபுள்ளிகள் பரிசீலிக்கப்படும்.

3. ஒப்பந்தபுள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதி கொடுக்கப்பட

4. மின் கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச் சான்றிதழ் அளித்த பின்பே சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதி முறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.

5. உரிய காலத்திற்குள் வாகனங்கள் வினியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

6. வாகனங்கள் வினியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்பந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப்பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.

7. ஒப்பந்தபுள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தபுள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி மற்றும் சரக்கு சேவை வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

8. ஒப்பந்தபுள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

9. ஒப்பந்தபுள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனை வரித்துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

10. ஒப்பந்தபுள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணி ஆணை வழங்கப்படும் போது கூடுதல் 1% வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டும்.

11. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படும் போது ஜி.எஸ்.டி 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

12. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தபுள்ளிகள் வைப்புத் தொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.

13. செலத்தப்படும் வைப்புத்தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14. மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி அளிப்பவர்கள் <http://www.tenders.tn.gov.in/> என்ற இணையதளத்தில் ஒப்பந்தபுள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தபுள்ளி அளிக்கலாம்.

15. இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்
கீழ்குளம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

பெறுநர்

1. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்
2. அலுவலக அறிவிப்பு பலகை.

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர்(கன்னியாகுமரி மாவட்டம்) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் , நாகர்கோவில் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. இளநிலை பொறியாளர், கருங்கல் பேரூராட்சி (தொகுப்பு).
5. தலைவர், கீழ்குளம் பேரூராட்சி.